465—

மொரப்பூரில் இரயில்வே மேம்பாலம் கட்டுதல்.

*5159—திரு. கே. சிங்காரம்

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டம், மொரப்பூரில் இரயில்வே மேம்பாலம் கட்டும் பணிக்கான செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், பணிகள் எப்பொழுது துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்ட மக்களுக்கு இரயில் போக்குவரத்துக்கு ஒரு மைய இடமாக விளங்கி வருவது மொரப்பூர் பகுதியாகும். தர்மபுரி மாவட்டம் முன்னேறுவதற்கு பலவகையிலும் இன்றைக்கு நம்முடைய புரட்சித் தலைவியினுடைய அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிற இந்தக் காலக் கட்டத்திலே, இந்த ஒரு செயல்பாட்டினையும் கருத்தில் கொண்டு, வருகின்ற நிதி ஆண்டிலேயாவது இந்தத் திட்டத்தை நிறைவேற்ற அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–05.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரெயில்வே மேம்பாலங்களைப் பற்றி நேற்றைக்கு கூட விளக்கமாகச் சொல்லியிருக்கிறேன். இன்றைக்கு ஒவ்வொரு பகுதியிலும் ரெயில்வே மேம்பாலம் கட்ட வேண்டுமென்ற உணர்வு இருக்கிறது. அதற்கான விதிமுறைகள்படி ரெயில்வே நிர்வாகமும், நம்முடைய அரசும் சேர்ந்து ஆளுக்கு 50 சதவீதம் என்ற அளவில் நிதியைக் கொடுத்து அந்த மேம்பாலங்களைக் கட்டுகிற பணியில் ஈடுபட்டிருக்கிறோம். இந்த இடத்தைப் பொறுத்த வரையில் ஏறத்தாழ ரூ. $1\frac{1}{2}$ கோடி செலவில் கட்ட வேண்டியிருக்கிற காரணத்தால் இன்றைக்கு கருத்துருவில் இந்தப் பாலத்தைச் சேர்க்க வாய்ப்பில்லையென்ற காரணத்தால் அதை எடுத்து செய்வதற்கு வாய்ப்பில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1992 ஏப்ரல் 3]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 466, திரு ஏ. கே. சி. சுந்தரவேல், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

466—

பம்பையாறு அணை கட்டும் திட்டம்.

*5285 திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்:

மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி ஆண்டியப்பனூர் கிராமத்தில் பம்பையாறு அணை கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரசின் பரிசீலனையிலுள்ளது.

திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூர் தொகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கை இது. ஆண்டியப்பனூர் கிராமம் ஜவ்வாது மலை அடிவாரத்தில் உள்ளது. பம்பையாறு அணை கட்டுவதால் சுமார் 15,000 ஏக்கர் நிலம் இதனால் பயன் அடைகிறது. திருப்பத்தூர் தொகுதியின் குடிதண்ணீர் பிரச்சினை பாதியாகக் குறையும். இங்கே அணை கட்டுவதால் சுமார் 300 கிராமங்கள் பயன்பெறும். ஆகவே, அணையைக் கட்டித்தர அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே குறிப்பிட்டிருக்கிற அணை என்பது ஆண்டியப்பனூர் கிராமத்தின் அருகில் பம்பையாற்றின் கிளை நதியாக இருக்கிற ஆண்டியப்பன் ஓடையின் குறுக்கே ஏறத்தாழ எட்டு கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட வேண்டிய ஒரு நீர்த் தேக்கம் என்று இன்றைக்கு குறிப்பிலே தந்திருக்கிறார்கள். இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது. நிலத்தை கையகப் படுத்துவதற்கான விவரங்களும் கேட்டிருக்கிறோம். இன்றைக்கு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப்போல 15,000 ஏக்கர் நிலம் பாசன வசதி பெற முடியாது. 2,000 ஏக்கருக்கு பாசன வசதி கொடுக்க முடியும். ஆகவே, இது சம்பந்தமாக மாவட்ட ஆட்சியர், நில நிர்வாக ஆணையர் மற்றும் நம்முடைய வருவாய்த்